இதழ் -41
16.01.2022

# தூமி

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

# ஒன்றாய் மீள்வோம்...!




வருடாவருடம் தைத்திருநாள் மலருகையில் மக்கள் மனங்கள் பூரிப்புடன், எமக்கு உணவு அளிக்கும் விவசாயிக்கும் சூரியனுக்கும் நன்றி சொல்லி புலகாங்கிதமடைவதே மரபாக உள்ளது. எனினும் இலங்கையில் 2022ஆம் ஆண்டு தைத்திருநாள் மக்கள் மனங்களில் அச்ச உணர்வையே அதிகப்படுத்துகிறது.

ஏற்கனவே எரிவாயு, எரிசக்தி, மரக்கறி என யாவற்றினதும் விலை பலமடங்கு பல்கிப்பெருகிக்கொண்டே செல்கிறது. அரிசி தான் ஓரளவு நியம விலையில் பெறக்கூடியதாக இருந்தது. ஏழைமக்கள் கஞ்சியாவது குடித்து தங்கள் வாழ்க்கையை நகர்த்தி செல்லக்கூடியதாக இருந்தது. எனினும் புதுப்பொங்கலிற்கு பின் கஞ்சியும் கனவாய்ப்போயிடுமோ என்பதே ஏக்கமாக காணப்படுகிறது.

அரசாங்கம் திட்டமிடலற்ற முறையில் உரங்களை தடை செய்திருந்தமையின் விளைவுகளை அரிசியில் புதிய அறுவடைக்கு பின்னரே உணர முடியும். பல பொருளியல் ஆய்வாளர்களும், அரிசியின் ஆரம்ப விலைகள் 300 ரூபாவை தாண்டலாமென ஆரூடம் கூறுகிறார்கள். அதுமட்டுமன்றி உள்ளூர் உற்பத்தி இலங்கை மக்களுக்கு போதுமானதாக காணப்படாது என்றும், எனினும் இறக்குமதிக்கு இலங்கை பொருளாதார நிலைமைகள் ஒத்துழைக்க போவதுமில்லை என்ற ஆருடங்களும் முன்வைக்கப்படுகிறது.

ஒரு சமூகம் இவ்வாறாக மகிழ்வற்று எதிர்கால உணவு நெருக்கடியை நினைத்து அச்சம்கொள்ளும் சமகாலப்பகுதியிலேயே வருட நிறைவு விருந்து, வருட ஆரம்ப விருந்து என ஆடம்பர கொண்டாட்டங்களில் உணவுகள் குப்பை தொட்டிக்குள் போகும் நிகழ்வுகளையும் அவதானிக்கக் கூடியதாகவே உள்ளது.

நாம் பலரும் அரசாங்கத்தின் மீது மாத்திரம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எம் கடமைகள் பொறுப்புக்களை துறந்து செல்கிறோம். ஏற்படவுள்ள உணவு நெருக்கடியில் முழு சமுகத்தையும் இணைத்து பாதுகாத்து கடந்து செல்வது தொடர்பில் ஒவ்வொரு குடிமகனும் ஆரோக்கியமான சிந்தனைகளை திறக்க வேண்டும். இன்று யாருக்கோ என நினைத்து கடந்து செல்ல முற்படின், நாளை நம் வீட்டு கதவுகளுக்கு முன்னால் இதே சிக்கல் வருகையில் பிறர் யாருக்கோ என்றவாறு கடந்து செல்லும் அவலமே தொடரும்.

***தை பிறந்துவிட்டது... வழியை நாம்தான் பிறப்பிக்க வேண்டும்..***

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி
பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்துளை...

04 வானம் பொய்க்காது
07 துமியின் பாசறை
08 சிங்ககிரித்தலைவன்
12 பொங்கலின் கதை
17 வேதாளத்தின் கதை
21 ஈழச்சூழலியல்
25 வானவில்லே வானவில்லே
30 சித்திராங்கதா
34 குறுக்கெழுத்துப்போட்டி
35 முன்பள்ளி மாணவர்களின் மொழித்தேட்டம்
38 அறக்கொடை விழா
39 கோட்டைகளின் சரிவு



வாசகர்களுக்கு
தைத்திருநாள்
நல்வாழ்த்துக்கள்...!



# வானம் பொய்க்காது..!

“எங்களோடு வயலுக்கு வந்தாயா? ஏற்றம் இறைத்தாயா? நீர் பாய்ச்சி நெடுவயல் நிறையக் கண்டாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா? கழனிவாழ் உழவருக்கு கஞ்சி கலயம் சுமந்தாயா? அங்கு கொஞ்சி விளையாடும் எம்குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தாயா? அல்லது மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே!”

இது மேற்குலகவாதியை நோக்கி எம் மூத்த குடியினர் எழுப்பிய ஒரு வீரக்குரல். அடிக்கடி கேட்டு இரசித்திருப்போம். ஆனால் இந்தக் கேள்விகளை இன்று நாம் நம்மை நோக்கியே கேட்க வேண்டிய ஒரு துர்பாக்கிய நகரமயமாக்கலை நோக்கி நகர்ந்து வந்து விட்டோம் என்பதுதான் இன்றைய சூழலின் நிதர்சனம்.

வீட்டு முன்றலில் வேம்பு, பலா - கிணற்றை அண்டி இளங்கமுகு- வேலியில் நெடும் பனைகள்- வடமேற்கில் மா - பின்வளவில் கப்பல் வாழை - ஆயிரங்காய்ச்சி அமுதசுரபியாய் அங்கங்கே தென்னை - என அனைத்தும் வீட்டிலேயே காய்க்க காய்க்க பறித்துண்டு பசி மறந்தோம் என்று போன தலைமுறை சொல்கிற கதைகளையே முழுவதுமாய் நம்ப மறுக்கும் ஓர் இளைய தலை முறையாய் இன்றைய சமுதாயம் மாறிக்கொண்டிருப்பதையே நாம் அனைவரும் மௌனமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். உணவும் உணவிற்குத் தேவையானவையும் சந்தைகளிலும் பல்பொருள் அங்காடிகளிலும் மட்டுமே வாங்கி பழங்கப்பட்ட இன்றைய பெரும்பாலான தலைமுறையினர்க்கு இந்தக் கதைகளை நம்புவது கொஞ்சம் கடினம் தான்.

விவசாயம் என்பது ஒரு பழைய வாழ்க்கைமுறை எனக்கருதி இந்த சமுதாயம் பல அர்த்தமற்ற புதிய மூட நம்பிக்கைகளிற்கும், வியாபார



யுத்திகளிற்குள்ளும் சிக்குப்பட்டு சிதைந்து கொண்டிருக்கிறது. யார் கைகளையும் எதிர்பாராது, யார் தயவிலும் தங்கியிராது, போலிப்பணிவு நாடகங்கள் போட்டு அதிகார வாழ்க்கைக்கு பொய்யாய் அடிபணிந்து வாழாது, வானத்தையும், பூமியையும் கடவுளாய் மதித்து தலை நிமிர்ந்து தம் உழைப்பில் தன்னிறைவாய் வாழ எக்காலத்திலும் விவசாயமே ஆகச்சிறந்த வழி என்பது நாம் எல்லோரும் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டே ஆகவேண்டிய உண்மையாகும்.

உழவர்களது எக்காலத்துக்குமான ஒரே நம்பிக்கை "வானம் பொய்க்காது." என்பதுதான். வானம் எத்தனையோ முறை பொய்த்திருந்தாலும் கூட அவர்கள் நம்பிக்கை அசைவதில்லை. அந்த திடமான நம்பிக்கைதான் அவர்களது தலை நிமிர்ந்த வாழ்வுக்கு காரணம். எத்தனை இடர்களையும் தாண்டி விளைந்த கதிரினை கைகளில் வாரியெடுக்கும் போதுதான் அவர்களது ஒட்டு மொத்தமான நம்பிக்கையின் உருவமாய் ஓர் இறைவனை தரிசிக்கிறார்கள். அந்தக்காட்சியையே இம்முறை நாம் உங்களிற்கு தரிசனமாக்கியுள்ளோம்.

அண்மையின் கொட்டும் மழை நேரம் ஒரு விவசாயியை நாம் சந்திக்க நேர்ந்தது. "கார்த்திகை போனால் மழையில்லையே" என்பது பழமொழி. கார்த்திகை முடிந்தும் விட்டது. விளை நிலம் காய்ந்து கிடக்கிறது. மண்ணைக் கிழித்து வெங்காயச்செய்கையை இப்போதே ஆரம்பித்து விட்டால் தன் விளைச்சல் சந்தையில் முன்னிற்கும் என்று முனைப்பாய் வெங்காயம் நட்டு முடித்து விட்ட மறுநாள் பெருமழையின் முதல் நாள். ஒரு நாள் மழை நீர் இறைப்பு மிச்சமாக இறைவன் தந்த பரிசு என்று சந்தோசத்தில் நனைந்து நனைந்து நீர் பாய்ச்சினார். ஆனால் அது இறைவன் அளித்த பரிசல்ல. அழிவிற்கான அறிவிப்பு என்பதை அவரின் உள்ளத்தின் ஒரு ஓரம் உணர்ந்திருந்தாலும் நம்பிக்கை கொண்ட நெஞ்சமாய் அதை ஏற்க மறுத்து கருமமாற்றிக்கொண்டிருந்தார். தொடர்ந்து கொட்டிய பெருமழையில் தன் பயிர் முழுவதும் மூழ்கி அழிந்து விட்ட பெருந்துயரில் இருந்தபோதுதான் நாம் அவரை சந்திக்க நேர்ந்தது.

அவர் துயரில் பங்கு கொள்ள, வீணாய்ப்போன அவர் உழைப்பினை நேரில் வந்து பார்க்கிறோம் என்று கூறினோம். அவருக்கு ஆறுதலாய் இருக்க அதுவே ஒரு வழி என்று கருதி அவரோடு வயலுக்குப் புறப்பட்டோம். ஆம் வயலுக்கு வந்தோம்!

வரம்பை மிஞ்சி நின்றது வெள்ளம். "வரப்புயர" என்று அந்த மூத்த பெண்மணி சொன்னது எமக்கு நினைவில் வர அந்த பெண்புலமையினை மீண்டும் எண்ணி நமக்குள்ளே பிரமித்திக் கொண்டோம். முழங்கால் வரை புதைந்துவிடக் கூடிய அந்த சகதிக்குள் இறங்க எம்மிடையே ஏற்பட்ட தயக்கத்தை கண்ட அந்த முதிய விவசாயி

“தம்பி, சேத்தில கால் வைக்க யோசிச்சா இனி சோத்தில கைவைக்கவும் யோசிக்கோணும்”

என்று முதுமையின் பளீர்ச்சிரிப்போடு கூறிக்கொண்டு முன்னேறினார். எம் தரம்- தராதரம் எல்லாம் அத்தோடு கால் விரல் இடை வழியே நழுவி காணாமல் போனதாய் உணர்ந்தோம். அவர் கூறியது இதுவரை கேட்டிராத புதுக்கவிதை ஒன்றும் இல்லைதான். ஆனால் அதை அவர் கூறிய போது அந்த வார்த்தைகளில் சக்தி எம்மை அதிகமாகவே தாக்கியது என்று சொல்லலாம். அவர் பாதங்களை தொடர்ந்தவாறே நாமும் பயணித்தோம்.

“சோனையன் அங்க இங்க திரியும். கவனமா பார்த்து வாங்கோ” (சோனையன்- பாம்பு) கூறிவிட்டு அவர் சாதாரணமாக நடந்து சென்றார். ஆனால் எமது நிலையோ பெருந்திண்டாட்டம் தான். அவரின் பாதங்களை தவறவிடாமலே பின்னோக்கி தொடர்ந்து கொண்டிருந்தோம்.

நெற்காணிகளை அவர் அறிமுகப்படுத்திய போது அவர் முகத்தில் தெரிந்த சிரிப்பு எங்கோ திடீரென்று ஒளிந்து கொண்டது போல் தோன்றியது. மட்டத்திற்கு சில அடி மேலே கையை உயர்த்தி

“வழமைக்கு இங்க நிக்கும் தம்பி.. இப்ப எப்பிடிக் கிடக்கு பாருங்கோ. இந்த முறை விளைச்சல் பெரிய நட்டந்தான். ஆனாலும் என்ன செய்யிற? வாரத கண்டுகொள்ளவேண்டியதுதான். உரம் இல்லை எண்டதுக்காக நிலத்தை காயவிடேலுமே? கிடக்கிறத வைச்சு வாரத வெட்டுறதான்”

என்று அவர் கூறிய பிறகுதான் உரமில்லாத பிரச்சினையின் உருவம் எமக்கு புலப்பட ஆரம்பித்தது. அரிசிக்கும் தட்டுப்பாடான எதிர்காலத்தை நோக்கி நம் நாடும் நாமும் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதை அந்தக்காட்சி எமக்கு தெளிவாக புலப்படுத்தியது.

தொடர்ந்து அவர் தன் வெங்காயச் செய்கைக்கு அழைத்துச் சென்றார். நட்ட தடம் தெரியாமல் வெள்ளம் மூடி இருந்தது. எங்களைப் போலவே அந்த வெள்ளத்தை பார்த்துக் கொண்டிருந்த அந்த விவசாயக் கண்களை மீண்டும் ஒருமுறை பார்த்தோம். கண்களில் கண்ணீர் ஏதும் தெரிகிறதா என்று உற்றுப் பார்த்தோம். இன்னும் அந்தக் கண்களில் நம்பிக்கை மட்டுமே தெரிந்தது. முழுவதுமே அழிந்தாலும் அவர்கள் வானத்தின் மீது கொண்ட நம்பிக்கையை மட்டும் யாராலும் அழித்து விடமுடியாது.

அவர்கள் கண்களில் தெரியும் அந்த நம்பிக்கையின் வேர் எது என்பதை சிந்தித்திப் பார்ப்பீர்களா? அதற்கான பதிலை அட்டைப்படத்தில் கண்டு கொள்வீர்கள்! ஆம். எத்தனை பேரிடர் தாண்டியும் அவர்கள் நம்பிக்கை வெற்றி பெறுகின்ற அந்த நொடியை அனுபவிக்கும் போது தன் க்‘டங்களை எல்லாம் மறந்து அவர்கள் பூரிக்கிறார்கள். தம் நம்பிக்கை பலிக்கின்ற நொடியில் அவர்கள்

காண்கின்ற எல்லாவற்றையும் கடவுளாய் எண்ணி கைதொழ ஆரம்பிக்கின்றனர். அந்த பூரிப்பின் பிரதிவிம்பம் தான், பொங்கல் என்கிற பண்டிகைக் கொண்டாட்டம்.

பொங்கல் எம்மில் எத்தனையோ பேருக்கு- யாருக்கோ அடி பணிந்து வாழும் அரச- தனியார் ஊழியர்களுக்கு ஒரு விடுமுறைப் பண்டிகை மட்டும்தான். ஆனால் உழவனுக்கு அது உணர்வு. தன் அசைக்க முடியாத நம்பிக்கையின் வெற்றிக் கொண்டாட்டம். பொங்கி வழிவது பால் மட்டுமல்ல அவர்கள் உள்ளமும் இன்பமும்.

**'பொங்கலோ பொங்கல்...! பொங்கல் பெருவாழ்த்துக்கள்..'**

# துமியின் பாசறை

துமி அமைப்பின் பாசறை தொடரின் முதல் நிகழ்வில் தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர் பா.ராகவன் அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு, பங்கேற்பாளர்களின் கேள்வி பதிலாக கலந்துரையாடி உள்ளார்.

இன்று இளையோர்களின் வாசிப்பு தொடர்பில் நிலவும் விமர்சனங்கள் மத்தியில் ஜனரஞ்சக எழுத்துக்களால் இளையோரை கவர்ந்துள்ள எழுத்தாளர் பா.ராகவன் அவர்கள் தனது எழுத்துலக பயணம் தொடர்பாக முன்வைத்த கருத்துக்கள் நிகழ்வில் கலந்து கொண்ட பலருக்கும் உந்துதலை அளிக்கக்கூடியதாக இருந்தது.

தனது பெறுமதியான நேரங்களை தைத்திருநாள் அன்று எம்முடன் கழித்து எமது நேரத்தினை பயனுடையதாக ஆக்கித்தந்த ஆசிரியருடன் நன்றிகளை பகிர்ந்து கொள்கிறோம்.

எழுத்தாளர் பா.ராகவன் அவர்களுடனான கலந்துரையாடல்களை கீழுள்ள Linkஇல் பார்க்கலாம்.
https://youtu.be/ZEinGD44vEg



ஜீவா ஷஜீவனின்

37

# சிங்ககிரித்தலைவன்

## சிங்கத்தின் நகங்கள் ஐந்து!

அணி அணியாக சிங்ககிரியின் அடிவாரத்தில் வீரர்கள் பாறைகளைப் புரட்டியும் அடர்ந்த பற்றைகளை வெட்டியும் அவற்றை யானைகளின் உதவியோடு அப்புறப்படுத்தியும் ஆரவாரமாக பணிகளில் ஈடுபட்டிருந்தனர்! அவற்றை மீகாரனின் கட்டளைத் தளகர்த்தர்கள் நெறிப் படுத்திக் கொண்டிருந்தனர்!

பாறைகளைப் புரட்டப் புரட்ட வெளியே வந்த பழைய கட்டுமானங்களின் எச்சங்களை வீரர்கள் பார்வையிட்டனர்... தமக்கு முன்னேயும் யாரோ இங்கு கூட்டமாக வசித்திருக்க வேண்டும்... அவர்களால் இவை உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்... எனவே குன்றின் உச்சியில் ஏறுவதற்கு நிச்சயம் வழிகள் இருக்கும் என்ற நம்பிக்கை தளகர்த்தர்களுக்கு ஏற்பட்டது. ஆனாலும், முன்பு இங்கு வந்தவர்களும் ஒரு வேளை இந்தக் குன்றில் ஏற முயற்சித்து தோல்வியடைந்து இக் குன்றின் அடிவாரத்தில் வசித்தவர்களாக இருந்தால் என்ன செய்வது? என்ற எண்ணமும் அவர்களுக்கு ஏற்பட்டது! இதற்கிடையில் காசியப்பனுக்கு செய்தி அனுப்பப்பட்டதால் அவன் உரிய இடத்துக்கு உடனே குதிரையில் விரைந்திருந்தான்!

அப்புறப்படுத்தப்பட்ட கற்பாறை களுக்குப் பின்னால் செதுக்கப் பட்டிருந்த பிரமாண்டமான கால் நகங்கள் அவன் கண்களுக்குத் தெரிந்தன... அவன் எண்ணத்தில் ஆயிரம் ஆயிரம் பொறிகள் தோன்றின! கற்பனையும் கலை இரசனையும் இயல்பாகவே வாய்க்கப்பெற்ற காசியப்பனின் எண்ணங்கள் எங்கெல்லாமோ சிறகடித்துப் பறந்தது!

ஏற்கனவே மீகாரன் ஆற்றங்கரையில் சந்தித்த துறவி சிங்ககிரியை பற்றி எச்சரித்திருந்தது காசியப்பனின் நினைவில் வந்து ஒரு விதக் கலக்கத்தினையும் ஏற்படுத்தி மறைந்தது! ஆனாலும் இந்த குன்று விடயத்தில் ஒரு கை பார்த்து விட வேண்டும்... இதனை தன் கோட்டையாக மாற்றி, எந்த காசியப்பனை தாழ்த்தப்பட்ட குலப்பெண்ணின் பிள்ளை என்றார்களோ, அந்தக் காசியப்பன் உயரத்தில் இருப்பதை, அகிலமே நிமிர்ந்து பார்க்க வேண்டும்! இதுவரை இந்த இலங்கை தேசத்தில் எந்த அரசனும் வாழாத சுகபோக வாழ்வை தான் வாழ வேண்டும் என்ற எண்ணமே காசியப்பனுக்கு அனைத்திலும் மேலோங்கி நின்றது! எனவே பணியில் ஈடுபட்டிருந்த வீரர்களை உற்சாகப்படுத்தத் தொடங்கினான்!

“வீரர்களே வெற்றி... இங்கு நாம் வந்த இத்தனை நாட்களில்

எமக்குக் கிடைத்த பெருவெற்றி இது! வேகமாகப் பாறைகளை நகர்த்துங்கள். இன்னும் இரண்டு மூன்று யானைகளை மேலதிகமாக வேண்டும் என்றால் வரவையுங்கள்! மீகாரன் அரண்மனையில் இருந்து திரும்புவதற்குள் நாம் குன்றின் உச்சியை அடைந்து மைத்துனருக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்போம்...”

என்றவன் தானும் வீரர்களோடு சேர்ந்து சிறிய பாறைகளைப் புரட்டிப் போடும் பணியில் இறங்கினான்! இதனால் இன்னும் உற்சாகமடைந்த வீரர்கள் வேலையை விரைவுபடுத்தினர்! மேற்பார்வை செய்து கொண்டிருந்த தளகர்த்தர்களும் இப்போது பணிகளில் ஈடுபட்டதனால், பணி விரைவு பட்டது! சிங்ககிரிக்கு காசியப்பனும் பரிவாரங்களும் வந்து நாட்கள் பல ஆனதால், அரண்மனையில் நடவடிக்கைகளை அனுராதபுரத்தில் கவனிப்பதற்காக மீகாரனை காசியப்பன் அனுப்பி வைத்திருந்தான்!

தமிழகத்தில், மகாநாமரையும் முகலனையும் கண்காணிக்க ஒற்றர்களை அனுப்பியது போலவே, மாந்தை மற்றும் யாழ்ப்பாணத் துறைமுகங்களை கண்காணிக்க சிறு படைக்குழுக்களையும் மீகாரன் அனுப்பியிருந்தான்! ஒரு வேளை மகாநாமர் செய்தி அனுப்பி வேற்று நாட்டுப் படைகள் நாட்டுக்குள் நுழையக்கூடும் என்ற எண்ணம் இந்த ஏற்பாட்டுக்கு காரணமாக இருந்திருக்க வேண்டும்! தமிழகத்தில் பௌத்த நெறிக்கு சார்பான களப்பிரர் ஆட்சி நடைபெறுவதால், பாண்டிய மன்னர்கள் மகாநாமருக்கு உதவக் கூடிய சூழ்நிலை அமையாவிட்டாலும் கூட, மகாநாமரின் புத்திசாலித்தனத்தால் களப்பிரர்களின் உதவி கூட முகலனுக்கு கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதை மீகாரன் சந்தேகித்திருந்தான்!

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய இந்த நிலையில் காசியப்பன் சிங்ககிரிக்கு சென்று அங்கு தன் அரண்மனை அமைக்க வலிந்து முயல்வதற்குப் பதிலாக அனுராதபுரக் கோட்டையை மேலும் பலப்படுத்தலாமே என்று மீகாரன் உள்ளார்ந்தமாக எண்ணிக் கொண்டாலும் தன் மீது உள்ள நம்பிக்கையால் தான் தன்னிடம் நாட்டின் பாதுகாப்பை ஒப்படைத்துவிட்டு காசியப்பன் சிங்ககிரியில் உள்ளான் என்ற எண்ணம் மீகாரனை சாந்தப்படுத்தியது!

பாறைகளும் பற்றைகளும் ஓரளவு அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் சிங்ககிரியின் அடிவாரத்தில் பிரமாண்டமாய் ஒரு விலங்கின் இரண்டு கால்களும், அவற்றின் இடையால் மேலே போகக்கூடிய பாதை அமைப்பும் தென்படவே காசியப்பனும் வீரர்களும் ஆனந்தக் கூத்தாடினர்!

ஆளை ஆள் கட்டித் தழுவியும், வெற்றிக் கோசங்கள் இட்டும் மகிழ்ந்தனர்...! அந்த ஆனந்தக் களிப்பில் அனைவருக்கும் இரவு விருந்து என்று காசியப்பன் அறிவித்தான்... திடீரென அவன்

எண்ணம் எங்கோ செல்ல ஒரு வீரனை அழைத்து காதில் ஏதோ சொல்லி அனுப்பினான்... சிறிது நேரத்தில் ஒரு பல்லாக்கு அவ்விடம் வரவே, அதில் இருந்து அழகிய சிலையாக லீலாதேவி கீழே இறங்கி வந்தாள்...


"வர வேண்டும் லீலா... வரவேண்டும்... அன்று நான் சிங்கச் சிகரம் என்று இதனைச் சொன்ன போது அப்படி ஒரு சிகரம் இருக்குமா? என்று வினவினாயே... உன் கண்களுக்கு இந்தச்சிங்கம் அன்று தெரியாமல் போய் இருக்கலாம் ஆனால் இன்று... இதோ பார்! சிங்கத்தின் கால்கள்... சிங்கத்தின் கால்கள் ....ஹா ஹா.. ஹா"

ஒரு சிங்கத்தைப் போலவே வியர்வையில் நீராடியிருந்த காசியப்பன் கர்ஜித்து சிரித்தான்! லீலாதேவியின் விழிகள் அகலத் திறந்து கொண்டன...

"ஆஹா.. ஆஹா... என்ன ஒரு கலைநயம்... எத்தனை அழகு இலங்கையின் முன்னோர்களின் ஆற்றல் வியக்க வைக்கிறதே... இது குபேரனின் நாடு என்று என் பாட்டி சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மை தான் போலும்.... இத்தனை பெரிய கட்டுமானத்தை குபேரனைத் தவிர யாரால் அமைக்க முடியும்..."

லீலாதேவியின் வார்த்தைகள் காசியப்பனை இன்னும் மகிழ்வடையச் செய்தன...

"குபேரனின் நாடு இப்போது இந்தக் காசியப்பனின் வீடு... குபேர



சாம்ராஜ்ஜித்யத்தைப் போலவே மீண்டும் இங்கே ஒரு அரசை அமைப்பேன் ராணி”

என்றவன் லீலாதேவியின் கையை பற்றி அதன் அருகினில் அழைத்து சென்றான்...

லீலாதேவி இமைக்காமல் அந்த கட்டுமானத்தின் கலை அழகை வியந்தபடி நின்றாள். அதை ஆவலோடு சுற்றிப்பார்த்தாள்...

ஒரு சிந்தனைப் பொறி லீலாவின் எண்ணத்தில் தட்டியது!

“நாதா... சிங்கச்சிகரம் என்றீர்களே... சிங்கத்திற்கு எத்தனை நகங்கள்?”

“இதிலென்ன சந்தேகம் லீலா... எத்தனை வேட்டைகளில் எத்தனை சிங்கங்களை வீழ்த்தியிருப்பேன்... நம்மைப் போலவே அவற்றுக்கும் ஐந்து நகங்கள் தானே...”

என்றவன் சற்று தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, அந்தக் கட்டுமானத்தைப் பார்த்தான்...

அவன் முன்னே மூன்று நகங்கள் மட்டும் காசியப்பனை முறைப்பாய் பார்த்தபடி நின்றன....”

**திருப்பங்கள் தொடரும்...**

## செய்தித் துளிகள்

● பாலைவனத்துக்கும், கடும் வெப்பத்துக்கும் பெயர் பெற்ற சவுதி அரேபியாவில் புத்தாண்டில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதன் பல புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



● கடல் விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி வரும் இந்திய ஸ்டார்ட்அப் நிறுவனம் கடல் விவசாயத்தில் விளையும் கடற்பாசிகளை எளிதாக அறுவடை செய்யும் மாபெரும் இயந்திரத்தை உருவாக்கியுள்ளது.





# தைப்பொங்கலின் கதை

தொண்டரடிப்பொடியன்

அறுவடையின் கொண்டாட்டமாக பார்க்கப்படும் தைப்பொங்கல் பண்டிகையின் பூர்வீகத்தை ஆராய்வதோடு கால ஓட்டத்துடன் எவ்வாறான மாறுதல்களை தைப்பொங்கல் பண்டிகை சந்தித்தது என்பதை தேடிப் பார்ப்பதே இந்த கட்டுரையின் நோக்கம்.

## தை விரதம்

பழங்காலத்தில் மண்ணையும் மழையையும் நம்பி நெல் விதைத்து அறுவடை செய்ய குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். ஒரு வருடத்தில், ஒரு வயல் 6 மாதங்கள் நெல் அறுவடைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆடியில் தேடி விதைத்த பயிர் நன்றாக வளர்ந்து விளைச்சலை அடைந்து அறுவடை நிலைக்கு தயாராகும் மாதம்தான் தை.

தை பிறந்து விட்டால் அறுவடை நடக்கும். விவசாயிக்கு நெல் மணிகள் கிடைக்கும். காளைகளுக்கு வைக்கோல் கிடைக்கும். அறுவடையான நெல் மணிகள் உணவுக்கு மட்டுமல்ல விற்பனைக்கும் பயன்படுத்தப்படும். எனவே, தைப் பிறந்தால் விவசாயிகள், விலங்குகள், வர்த்தகர்கள் என சகலருக்கும் பலவழிகளில் நன்மை உருவாக ஆரம்பித்துவிடும். எனவேதான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி உருவானது.

நாடு சிறக்க வேண்டுமென்றால் நெற்பயிர்கள் செழிக்க வேண்டும். விதைப்பு தொடங்கிய ஆடி மாதம் தொடக்கம் மக்கள் பயபக்தியுடன் விரதம் இருப்பர். காலநிலையும் மண்ணும் கை கொடுக்க வேண்டுமென்று இயற்கையையும்



இறைவனையும் வழிபடுவர். விரதம் வெற்றிகரமாக பூர்த்தியாகி, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர்.

பணத்திற்கு பதிலாக காணப்பட்ட பண்டமாற்றின் முக்கிய அம்சமாக நெல் மணிகள் காணப்பட்டன. நெல் மணிகளையே மன்னர்களுக்கு வரியாக மக்கள் செலுத்தினார்கள். நன்கு விளைச்சல் பெற்றால் தான் வரி செலுத்தியது போக மீதத்தை வீட்டிற்கு கொண்டு செல்ல முடியும். வரி வசூலிக்கப்பட்ட நெல்கள், அரண்மனை நிர்வாக உணவிற்கு செலவிடப்படும். பஞ்சம் வந்தால் மக்களுக்கே கூடத் திருப்பி வழங்கப்படும்

தமிழ் மக்களின் நெடுங்காலப் பயிர் இந்த நெல். நெல்லுச்சோறு என்பது அந்தக் காலத்தில் எப்போதாவது விசேட நாட்களில் மட்டுமே சமைக்கப்படும் உணவாக காணப்பட்டது. செல்வந்தர்களும்,





அரச வம்சத்தினருமே தினமும் நெற்சோறு உண்டனர்.

### அது ஏன் பொங்கல்?

பானையில் வெண்நுரை தள்ளிப் பொங்கி வழிவதே பொங்கல் எனப் பெயர் பெற்றது.

புதிய அடுப்பு, புதிய பானை மற்றும் புதிய விறகுகள் மட்டுமே பொங்கல் சமைக்க பயன்படுத்துவது வழக்கம். இன்றும் சில ஊர்களில், பொங்கலுக்குச் சில நாட்களுக்குமுன் பனை ஓலையை வெட்டி காயவைத்து அதை மட்டுமே எரித்து சமைப்பார்கள். அதே போன்றே அடுப்பும். செங்கல் அடுக்கி, சேறு பூசி, சாணி மொழுகி தயார் செய்வார்கள். முதலில் அறுவடை செய்த அரிசியை குத்தி பச்சரிசியாக்குவர்.

பொங்கலன்று அதிகாலை எழுந்து வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு அதன் நடுவில் பானை வைப்பர். புதுப்பானையில் புது அரிசியிட்டு முற்றத்தில் பொங்க வைப்பார்கள். புதிய பானைக்குப் புதிய மஞ்சளைக் காப்பாக அணிவர். புதிய மஞ்சள் கொத்தையும், புதிய கரும்பையும், புதிய காய்கறிகளையும் அன்று



பயன்படுத்துவர். கோலமிட்ட இடத்தில் தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி, கதிரவனை வணங்கி பொங்கலிடத் தொடங்குவர். புதிய பானையில் அரிசி, வெல்லம், பால், நெய் சேர்த்து சமைப்பர்.

இந்துத் தமிழர்கள், சாணத்தில் பிள்ளையார் பிடித்தும் வைப்பார்கள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று "பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என்று உரக்கக் கூவுவர். தனது முதற் பயனை கதிரவனுக்குப் படைத்துப் பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே, தாங்கள் நுகர்வார்கள். இது தமிழரின் பண்பாடாக தொன்று தொட்டு உள்ளது.

பழங்காலத்தில் பொங்கல் வைக்க மண் பானைகள் பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது அதிகம் வெண்கலப் பானை, சில்வர் பானைகள் பயன்படுத்தப்படுகின்றன. நெல்லுடன் அந்த வருடத்தில் என்னென்ன அறுவடை செய்தனரோ அதையும் வைத்து சூரிய வழிபாடு அல்லது இறைவழிபாடு செய்வார்கள். பிற்காலத்தில் கரும்பு மட்டுமே பிரதான இடம் பிடித்தது. கரும்பை மட்டும் சேர்த்து வழிபாடு செய்யத் துவங்கினர்.

## முதல் நாள் போகிப் பண்டிகை

சூரியனை மையமாகக் கொண்ட தமிழரின் ஆண்டுக் கணிப்பின்படி வருடத்தின் இறுதி நாளான மார்கழி இறுதி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்த நாள் "பழையன கழித்து, புதியன புகவிடும்" நாளாகக் கருதப்படுகிறது. பழையவற்றையும், உபயோகமற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது. போகியன்று, வீட்டின் கூரையில் பூலாப்பூ செருகப்படும். அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும்.

பழந்துயரங்களை அழிப்பதான இப்பண்டிகையைப் "போக்கி" என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. அக்கால





வழக்கப்படி வருடத்தின் கடைசிநாள் என்பதால், நடந்து முடிந்த நல் நிகழ்வுகளுக்கு நன்றி கூறும் நாள் போகி என்போரும் உண்டு. போகிப் பண்டிகையின் போது போளி, வடை, பாயசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.

வீடு மட்டுமல்ல மனதில் இருக்கும் தீய எண்ணங்களும், தவறான எண்ணங்களும் நீக்கப்பட வேண்டும் என்பது இதில் உள்ள தத்துவமாகும். இது இந்தியத் தமிழர்களிடையே தான் முக்கியமான பண்டிகையாக உள்ளது.

### மறுநாள் மாட்டுப் பொங்கல்

இன்று போல் இயந்திரங்களையும் இரசாயனங்களையும் நம்பி அன்று எவரும் விவசாயம் செய்யவில்லை. வாழ்வாதாராமான உழவுக்கு உதவும் காளை மாடுகளை வீட்டின் இன்னொரு உறுப்பினராகவே கருதினர். அந்த காளை மாடுகளுக்கு நன்றி செலுத்தி வழிபடும் நாளாக தைப்பொங்கலின் மறுநாளை கொண்டாடினார்கள். இயந்திரங்கள் வந்துவிட்டாலும் இன்றும் காளைகளுக்கான வணக்கம் செலுத்தும் முறை தமிழர் வாழும் பகுதி எங்கும் வாழ்ந்துகொண்டு தான் இருக்கிறது.

மாடுகள் கட்டும் தொழுவத்தினைச் சுத்தம் செய்து கொள்வார்கள். கால்நடைகளைக் குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு வண்ணம் பூசி, கூரான கொம்பில் சலங்கை கட்டிவிடுவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள்.

உழவுக்கருவிகளைச் சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம், காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனைக் காட்டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.



தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் காளை பிடிக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு இந்நாளில் நடைபெறும். ஆனால் இலங்கையில் மாட்டுச்சவாரி நிகழ்வுகள்தான் பரவலாக எல்லா இடங்களிலும் நடைபெறும்.

## காணும் பொங்கல்

இதுவும் இந்தியாவில் மட்டுமே பிரபலமான பண்டிகையாகும். உற்றார், உறவினர், நண்பர்களைக் காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன நடக்கும். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டி மன்றம், உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறல் என்று வீர சாகசப் போட்டிகளும் இடம்பெறும்.

பொங்கல் வெறும் பண்டிகை மட்டுமல்ல. இது இயற்கைக்கும் மனிதர்களுக்குமான நெருக்கத்தை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் பண்டிகை என்பதை மனதில் கொண்டு வருடத்தின் மற்றைய நாட்களிலும் இயன்றவரை இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்வோமாக.



## செய்தித் துளிகள்

● பிரிட்டனின் பிளின்ட்ஷயரில் 18 பேரைக் கடித்த, ஸ்ட்ரைப் என்ற பெயரால் அழைக்கப்பட்ட சாம்பல் நிற அணில் ஒன்று கருணைக் கொலை செய்யப்பட்டுள்ளது.



● பிரான்சின் மிகவும் மதிப்புமிக்க அரசியல், அறிவியல் பல்கலைகழகங்களில் ஒன்றான சயின்சஸ் போ லில்லில் (Sciences Po Lille) சாப்பிடுவதற்கும், குடிப்பதற்கும், நன்கு வாழ விரும்புவர்களுக்குமான ஒரு முதுகலை பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.




● இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்காவில் வாழும் தமிழர் அசோக் எல்லுசாமி என்பவர் உலகின் முதல்நிலை கோடீஸ்வரரான எலான் மஸ்க்கின் டெஸ்லா நிறுவனத்தின் ஆட்டோ பைலட் வடிவமைப்பு குழுவுக்கு தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




சினமிகா

# புதிர் 20
# வேதாளத்தின் கதை



உண்மையில் வேதாளம் என்பது தேவர்கள் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த புட்பதத்தன் தான். புட்பதத்தனும் அவனது மனைவி தேவதத்தையும் தேவர்களுக்கு ஆடை தைத்து கொடுக்கும் பணியை செய்து கொண்டிருந்தனர். இந்நிலையில் புட்பதத்தனுக்கு ஒரு விபரீத ஆசை தோன்றியது. அதுதான் ஈசனுக்கும், பார்வதி தேவிக்கும் அழகிய உடை ஒன்றை தைத்து கொடுக்க வேண்டும் என்று.

புட்பதத்தன் தான் நினைத்தது போலவே அழகிய ஆடைகளை தயாரித்து அதனை ஈசனுக்கு வழங்க கைலாயத்திற்கு சென்றான். அங்கு சென்று ஈசனை பார்த்த மகிழ்ச்சியில் வந்த வேலையை மறந்து விட்டு ஈசனை வணங்கியே நேரத்தை கழித்து விட்டான். ஈசனிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் திரும்பிய போது இருள் சூழ்ந்துவிட்டது. பிறகுதான் அவனுக்கு ஆடையை ஈசனுக்கும், பார்வதிக்கும் தராமல் வந்துவிட்டது ஞாபகம் வந்தது. இருட்டியும் விட்டதால் கைலாயத்தின் வாசலிலேயே படுக்க முடிவெடுத்தான். அன்று இரவு சிவபெருமான் பார்வதி தேவியிடம் ஒரு முக்கியமான தேவ ரகசியம் பற்றி கூறிக்கொண்டிருந்தார். அது கைலாயத்தின் வாசலில் படுத்திருந்த புட்பதத்தன் காதுகளில் விழுந்துவிட்டது.

மறுநாள் ஈசனிடம் சென்று தான் கொண்டுவந்த ஆடைகளை கொடுத்து விட்டு ஆசிபெற்ற புட்பதத்தன், நேற்று இரவு தான் கைலாய வாசலில் படுத்திருந்ததையும், சிவன் கூறிய தேவ ரகசியத்தை கேட்டு விட்டதையும், அப்போதிருந்தே தன் மனம் படாதபாடு படுவதையும் கூறினான். தேவ ரகசியத்தை கேட்டு விட்டதால் கோபமுற்றார் சிவபெருமான், இருப்பினும் அவன் உண்மையை கூறியதால் அதனை எக்காரணத்தை கொண்டும் யாரிடமும் கூறக்கூடாது என்று அவனை எச்சரித்து அனுப்பினார்.

சிவனின் கோபத்தால் கைலாயத்திலிருந்து திரும்பி வந்த புட்பதத்தன் பல நாட்கள் நிம்மதியின்றி தவித்து வந்தான். அவன் மனைவி பல முறை கேட்டும் காரணம் என்னவென்று சொல்லாத புட்பதத்தன் ஒருநாள் அழுத்தம் தாங்காமல் அந்த தேவ ரகசியத்தை தன் மனைவியிடம் கூறிவிட்டான். இது உடனே ஈசனுக்கு தெரிந்துவிட்டது. தன் பேச்சை மதிக்காத புட்பதத்தனை வேதாளமாக மாறி பூமியில் முருங்கை மரத்தில் தொங்கும் படியும், ரகசியத்தை காக்க முடியாத நீ இனி கேள்விகள் கேட்டுக்கொண்டே உன் வாழ்நாளை கழிப்பாய் என்றும், ரகசியத்தை கேட்ட தேவதத்தை வனத்தில் இரவு முழுவதும் வீணை வாசித்து மற்றவர் உறக்கத்தை கெடுத்து கொண்டே இருப்பாய் என்றும் சாபமளித்தார்.

பல ஆண்டுகளாக வேதாளமாக புட்பதத்தன் சுடுகாட்டில் உள்ள முருங்கை மரத்தில் தலைகீழாக தொங்கிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் முனிவன் ஒருவன் வேதாளத்தை தன் அடிமையாக்கி அதன் சக்திகள் மூலம் உலகத்தை ஆள நினைத்தான். அதற்காக தவமிருந்த போது காளி தேவி 1000 அரசர்களின் தலையை தனக்கு காணிக்கையாக அளித்தால் உன் வேண்டுதலை நிறைவேற்றுகிறேன் என்று கூறினார். அந்த கொடூர முனிவனும் பல அரசர்களை ஏமாற்றி காளி கோவிலுக்கு அழைத்து வந்து அவர்களை பலிகொடுக்க தொடங்கினான். இப்படியே 999 அரசர்களின் தலையை காளிக்கு பலி கொடுத்தான். ஆயிரமாவது பலியாக விக்கிரமாதித்தனை பலி கொடுக்க நினைத்த முனிவன் விக்கிரமாதித்தனின் அரசவைக்கு சென்று காட்டுக்குள் ஒரு காளி கோவில் இருப்பதாகவும், அங்கு வேண்டினால் உங்கள் நாடு வளம்பெறும் எனவும் கூறினான். விக்கிரமாதித்தனும் முனிவனின் பேச்சை நம்பி அவனுடன் செல்ல சம்மதித்தான்.

முனிவனுடன் காளி கோவிலுக்கு சென்ற விக்கிரமாதித்தன் அன்று இரவு அந்த கோவில் மண்டபத்தில் தங்க முடிவெடுத்தான். முனிவனும் பூஜை முடிந்தவுடன் விக்கிரமாதித்தனை பலியிட முடிவெடுத்தான்.

அப்பொழுது தூரத்திலிருந்து கேட்ட மனதை மயக்கும் வீணை இசை அவனை ஈர்த்தது. இசை வந்த திசை நோக்கி நடந்தான். அங்கே ஒரு அழகிய பெண் இருட்டில் அமர்ந்துகொண்டு வீணை வாசித்து கொண்டிருந்தாள். அவளிடம் நீ யார் ஏன் வனத்திற்குள் அமர்ந்து வீணை வாசித்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டான் விக்கிரமாதித்தன்.

அந்த பெண் வேறு யாருமல்ல தேவ ரகசியத்தை கேட்ட புட்பதத்தனின் மனைவி தேவதத்தை. அவள் தன் கதையை விக்கிரமதித்தனிடம் கூற அவள் மேல் இரக்கம் கொண்டான் விக்கிரமாதித்தன். தங்களுடைய சாபம் தீர என்ன செய்ய வேண்டுமென்று தேவதத்தையிடம் கேட்டான். அதற்கு தேவதத்தை நானும் வேதாளமாக தொங்கிக் கொண்டிக்கும் என் கணவரும்

காட்டிற்குள் இருக்கும் காளி கோவிலுக்கு சென்று வழிபட்டால் எங்கள் சாபம் நீங்கும். ஆனால் என் கணவரை அந்த முருங்கை மரத்தில் இருந்து இறக்கி காளி கோவிலுக்கு அழைத்து வருவது இயலாத ஒன்று என்று கூறி அழுதாள். அது எவ்வளவு பெரிய ஆபத்தாய் இருந்தாலும் நான் அதனை செய்கிறேன் என்று கூறி அங்கிருந்து சென்றான் விக்கிரமாதித்தன்.

சுடுகாட்டிற்கு சென்ற விக்கிரமாதித்தன் அங்கு தலைகீழாக தொங்கி கொண்டிருந்த வேதாளத்தை கட்டி முதுகில் போட்டுக் கொண்டான். அதுவரை அமைதியாக இருந்த வேதாளம் விக்கிரமாதித்தனிடம் பேச தொடங்கியது.

“நாம் கோவிலுக்கு செல்லும் வரை நீ ஒரு வார்த்தை பேசக்கூடாது, அதே நேரம் நான் ஒரு கதை சொல்லி அதிலிருந்து கேள்வி கேட்பேன். அதற்கு பதில் தெரிந்தும் நீ கூறவில்லை என்றால் உன் தலை வெடித்து சிதறிவிடும்.”

என்று கூறியது. விக்கிரமாதித்தன் என்ன சொல்வதென்று தெரியாமல் விழிக்க அவர்களின் பயணம் தொடங்கியது.

விக்கிரமாதித்தன் முதுகில் ஏறிய வேதாளம் அவனிடம் கதை சொல்ல தொடங்கியது. விக்கிரமாதித்தனும் கதை கேட்க தொடங்கினான். இறுதியாக வேதாளம் கதையிலிருந்து ஒரு கேள்வி கேட்டது. அதற்கான விடை விக்கிரமாதித்தனுக்கு தெரிந்தே இருந்தது. பதில் கூறினால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திற்கே சென்றுவிடும். பதில் கூறவில்லை என்றால் தலை வெடித்து சிதறிவிடும், என்ன செய்யலாம் என்று யோசித்த விக்கிரமாதித்தன் பதிலே கூறிவிடலாம் என்று வாய்திறந்து பதில் கூறிவிட்டான். தான் இட்ட நிபந்தனையை விக்கிரமாதித்தன் மீறிவிட்டதால் மீண்டும் முருங்கை மரத்திற்கே சென்றது வேதாளம். இதேபோல 19 முறை கதை சொல்லி மீண்டும் முருங்கை மரத்திற்கே சென்றது வேதாளம்.



மீண்டும் வேதாளத்தை தன் முதுகில் ஏற்றிக்கொண்டு கோவிலுக்கு கிளம்பினான் விக்கிரமாதித்தன். இம்முறையும் வேதாளம் கதை சொல்ல தொடங்கி இறுதியில் ஒரு பந்தயத்தையும் போட்டது.

இப் பந்தயத்தில் வெற்றி பெற எதிர்த் திசையில் பார்த்துக்கொண்டு இங்குள்ள சுவரில் 12 தோட்டாக்களை சுட்டு ஒவ்வொரு நேர்கோட்டிலும் நான்கு துளைகள் கொண்ட ஏழு நேர்கோடுகளை அமைக்க வேண்டும். நிச்சயமாக சில துளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட நேர்கோடுகளில் இருக்கும். சுவரில் சன்னங்கள் எங்கே துளைக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள் மன்னா? என்று கூறி வேதாளம் அமைதி கொண்டது.

விக்கிரமாதித்தன் வாயை திறந்து பேசவில்லை. கேள்விக்கு பதில் கூறுவது போலவே பாசாங்கு செய்து கொண்டு கோவில் வரை வந்துவிட்டான். விக்கிரமாதித்தனையே கவனித்து வந்த வேதாளம் கோவில் வந்து விட்டதை உணரவில்லை. சிவன் கூறியபடி கோவிலுக்கு புட்பதத்தனும், தேவதத்தையும் சேர்ந்து வந்தததால் அவர்களின் சாபம் நீங்கியது.


சாபம் நீங்கிய புட்பதத்தன் விக்கிரமாதித்தனுக்கு நன்றி கூறியதோடு முனிவனின் உண்மை யான எண்ணத்தை பற்றியும் கூறினான். இதனை கேட்டு அதிர்ச்சியடைந்த விக்கிரமாதித்தன் அந்த முனிவரின் தலையை காளி தேவி முன் வெட்டி வீழ்த்தினான். அப்போது அங்கு தோன்றிய காளி தேவி,

“விக்கிரமாதித்தா, நீ கொடுத்த பலியில் என் மனம் குளிர்ந்தது. உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேள்”


என்று கூறினார். அதற்கு விக்கிரமாதித்தன் முனிவனால் கொல் லப்பட்ட அனைத்து அரசர்களும் உயிர்பெற வேண்டும் என்று வரம் கேட்டார். காளி தேவியும் விக்கிரமாதித்தன் கேட்ட வரத்தை தந்ததோடு அவனையும், அவன் நாட்டு மக்களையும் வாழ்த்திவிட்டு சென்றார்.

முற்றும்...

## புதிர் 19 ~ விடை



## புதிர் 20 ~ விடை



## கடலில் எண்ணெய் கசிவுகள்




த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

கடலில் தாங்கியொன்றில் இருந்து வெளியேறும் எண்ணெயின் நியம விதியை தீர்மானிப்பதில் எண்ணெயின் பௌதீக, இரசாயன இயல்புகள், நுண்ணுயிர்களின் தன்மை, அவற்றின் தொழிற்பாடுகள் போன்ற பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய சில பௌதீக காரணிகளாவன, எண்ணெயின் தண்ணீர்ப்பு, ஆவியாதல் பண்புகள், பாகுத்தன்மை என்பனவாகும். பெரும்பாலான எண்ணெய்களின் தண்ணீர்ப்பு நீரை விடக் குறைவாகும். இதனால் அவை நீரில் மிதக்கின்றன. பாரமான எண்ணெய்கள் நீரில் தாழ்ந்து போகின்றன. வழமையாக இவை தொங்கு நிலைப் பதார்த்தங்களுடன் கலக்கின்றன. மண்ணெண்ணை, டீசல், கெசோலின் என்பன விரைவாக ஆவியாகக் கூடியனவாகும். பலமான காற்று வீசும் போதும், வெப்பநிலை அதிகமாக உள்ள போதும், இது தூண்டப்படும். குறைந்த கொதிநிலையுடைய, பாரமான மசகு எண்ணெய் குறைவாகவே ஆவியாகும். கடல் நீரிலும்,



நன்னீரிலும் வாழும் ஏராளமான பக்ரீறியாக்களும், பங்கசுக்களும் தமக்கு தேவையான காபன், சக்தி என்பனவற்றைப் பெற எண்ணையை பயன்படுத்தும் வல்லமையைக் கொண்டுள்ளன.

குறைந்தளவான நைதரசனையும், பொசுபரசையும் கொண்டுள்ள நீரில் எண்ணெய் பிரியகையடைவதைத் தூண்டும் நுண்ணுயிர்களின் தொழிற்பாடு குறைவாகவே காணப்படும். எனவே நைதரசனையும், பொசுபரசையும் மேலதிகமாக இடும் போது உயிரியற் படியிறக்கமடையும் வேகத்தைத் தூண்டலாம்.

குளிரான பிரதேசங்களில் குறைவான வெப்பநிலையில் பக்ரீறியாக்களின் தொழிற்பாடுகள் மந்தமாகவே இடம்பெறுவதால், இங்கு எண்ணெய்கள் மெதுவாகவே பிரிகையடையும். எண்ணெய் வெளியேறுவதால் மீன்பிடித்துறைக்கு பொருளாதார இழப்புகள் ஏற்படும். இது குளித்தல், முக்குளித்தல், படகோட்டம், ஏனைய பாரம்பரிய நடவடிக்கைகள், மற்றைய பொழுது போக்கு அம்சங்கள் என்பனவற்றை பாதிப்பதோடு, உல்லாச பயணத்

துறையையும் மோசமாகப் பாதிக்கும். எண்ணெயினால் நீர் அதிகளவில் மாசடைந்துள்ள வேளையில் குளிரூட்டுவதற்கு கடல்நீரைப் பயன் படுத்தும் கடலிற்கு அண்மையில் அமைந்துள்ள மின்பிறப்பாக்கி நிலையங்களை கட்டாயமாக மூட வேண்டிய நிலையேற்படலாம். இதே போன்று உப்பகற்றும் தொழிற் துறையும் மோசமாகப் பாதிக்கப் படலாம். துறைமுகங்களில் ஏற்றி, இறக்கும் போது ஏற்படும் விபத்துகளினால் வெளியேறும் எண்ணெயின் காரணமாக கப்பல் களின் போக்குவரத்து மட்டுப் படுத்தப்படலாம்.

மனிதர்களின் செயற்பாடுகளினால் உருவாகும் கழிவுகளை உறிஞ்சி, அதனை விரைவாகப் உயிரியற் படியிறக்கமடையச் செய்யும் அளப்பரிய வல்லமை கடலிற்கு உள்ளதென சிலர் பிழையாகக் கருதுகின்றனர். தொழிற்சாலைகளிலிருந்து வெளி யேறும் திரவக்கழிவுகளை பெரும் பாலான ஆறுகள் கடலிற்கு காவிச் செல்கின்றன. ஐரோப்பாவிலிருந்து எல்பே, ரைன், சீல்ட், தேம்ஸ், ஹம்பர்,





டைன் என்பனவும், மத்திய தரைப் பிரதேசத்திலிருந்து ரோன், ஆர்னோ, போ என்பனவும் மேற்குறிப்பட்டவாறு கடல்நீரை மாசடையச் செய்யும் ஆறுகளிற்கு நன்கறியப்பட்ட சிறந்த உதாரணங்களாகும்.

தற்போது கூட சில நாடுகளில் சாக்கடைக் கழிவுகள் கடலினுள் இறைக்கப்படுகின்றன. பால்டிக், வட கடல் என்பனவற்றை அடையும் நதிகள் பல தொன் கணக்கான நைதரசனை கொண்டு வருவதால் சில ஐரோப்பிய நாடுகளின் கடற்கரை வழியே அல்காக்களின் அபரிதமான வளர்ச்சி பொதுவானதொரு காட்சியாகும். Acectaldehyde மற்றும் Vinyl chloride என்பனவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையினால், 1932 ஆண்டிலிருந்து 1968 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கடலுக்கு வெளியேற்றப்பட்ட கழிவுகளினால், யப்பானிலுள்ள மினமரா என்னுமிடத்தில் பாதரசம் (Mercury) நஞ்சாக்கம் நிகழ்வு இடப்பெற்றது. இந்த தொழிற்சாலை பாதரச (மேர்கரி) ஒக்சைட்டை ஊக்கியாக பயன்படுத்தியது. நுண்ணுயிர்கள் நீரில் காணப்பட்ட பாதரசத்தை மிகுந்த நச்சுப் பொருளான

மெதயில் மேர்கறியாக மாற்றியது. இது மீன்களால் உள்வாங்கப்பட்டு உள்ளூர்வாசிகளுக்கு உணவு சங்கிலி மூலமாக கடத்தப்பட்டது. ஆயிரம் பேர் இறந்ததுடன், பல ஆயிரக்கணக்கானோர் அங்கவீனமுற்றார்கள். மெதயில் மேர்க்கறியினால் தான் நஞ்சாக்கம் நிகழ்ந்தது என்பதை அறிய சில காலம் எடுத்தது.

எண்ணெய் தாங்கிகளினால் ஏற்படும் விபத்துகளினால் கடல் மாசடைகிறது. 1989 ஜுன் மாதத்தில் 53 மில்லியன் கலன் எண்ணெய் தன்னகத்தே கொண்ட Exxon valdez என அழைக்கப்படும் 1,000 அடி நீளமான எண்ணெய்த் தாங்கி கடலில் உள்ள கற்பாறையுடன் மோதி அலஸ்கா கடற்பகுதியில் மூழ்கியது. இதனால் 53 மில்லியன் கலன் மசகு எண்ணெய் கடலில் சிந்தப்பட்டது. இதனால் பல ஆயிரக்கணக்கான கடல் பறவைகள் இறந்ததுடன் மீன் வளங்களும் அழிந்தன. மேலும் பல உயிர் வாழினங்களுக்கு தீங்கு ஏற்பட்டதுடன் சுற்றாடலுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த பாதிப்புகளிலிருந்து இன்னமும் இந்த பிராந்தியம் மீளவில்லை. ஆயிரம் மைல்களைக் கொண்ட கரையோரம் மாசைடந்தது.





இதைச் சுத்தமாக்க 3.4 பில்லியன் டொலர் பணமதிப்பு செலவாகியது. ஏப்பிரல் 2010 இல், Louisiana கடற்கரையிலிருந்து 50 மைல்களுக்கு அப்பால் Deepwater Horizon எண்ணெய் அகழ்வு இயந்திரம் (Oil rig) வெடித்து சிதறிய போது 200,000 கலன்களை அண்டிய எண்ணெய் தினமும் கடலில் சிந்தப்பட்டது. இதுதான் உலகத்திலே மிகவும் மோசமான எண்ணெய் சிந்தப்பட்ட விபத்தாகும். இந்த விபத்தில் 20 ஊழியர்கள் இறந்தார்கள். முழுமையான விசாரணையின் பின்னர், அமெரிக்க நீதித்துறை 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை அபராதமாக பிரிட்டிஸ் பெற்றோலியம் கொம்பனிக்கு விதித்தது.

இலங்கையின் மேற்கு கடலோரங்களில் அவ்வப்போது காணப்படும் அல்காக்களைக் கொண்ட துர்நாற்றத்துடனான சிவப்பு நிறமான அலைகள் உருவெடுக்கின்ற தோற்றப்பாடானது சில பிரதேசங்களில் கடல், கழிவுகளை உறிஞ்சுவதில் தமது எல்லையை அடைந்துள்ளது என்பதற்கான சிறந்ததொரு சான்றாகும். அத்துடன் கொழும்பைச் சூழ கடல் மாசடைந்து வருகின்றது

என்பதற்கான எச்சரிக்கையாகவும் இது விளங்குகின்றது. ஐக்கிய நாடுகளிற்கான சர்வதேச கடல் நிறுவனம், தூய்மையான கடலைப் பேணிப் பராமரிப்பதற்கு வசதியாக 1989 ஜுன் முதலாம் திகதி முதல் அமுலிற்கு வரும் வகையில் கப்பல்களினால் கடலில் வீசப்படும் கழிவுகள் தொடர்பாக கடும் நிபந்தனைகளைக் கொண்ட சர்வதேச விதிமுறைகளை விதித்துள்ளது.

(அ). நிலத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர்கள் தொலைவு வரையில் எவ்வகையான கழிவுப் பொருட்களையும் வீசக் கூடாது.

(ஆ) எந்தவொரு இடத்திலும் பிளாஸ்டிக் போன்ற இலகுவில் பிரிந்தழியாத பொருட்களை வீசக் கூடாது.

(இ) ஏனைய கழிவுகளை, அவற்றின் தன்மைக்கேற்ப பல தூரங்களில் வீசலாம். உதாரணமாக சில கழிவுகளை நிலத்திலிருந்து 40 கிலோ மீற்றர்களிற்கு அப்பாலேயே வீச வேண்டும்.

ஆராய்வோம்.....

## செய்தித் துளிகள்

● உலகிலேயே முதல் முறையாக, AI நீதிபதி அதாவது செயற்கை நுண்ணறிவு கொண்ட நீதிபதியை சீனா உருவாக்கியுள்ளது. இந்த நீதிபதி வாய்மொழி வாதங்களைக் கேட்டு 97 சதவீதம் சரியான தீர்ப்புகளை தருவதாக சீனா கூறியுள்ளது.



● பிரபல செல்போன் இயங்குதளமான ப்ளாக்பெர்ரி தனது சேவைகளை முழுவதுமாக நிறுத்திக் கொள்வதாக அறிவித்துள்ளது.

● மனித உடலின் புதிய பாகம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த பகுதி தாடையின் மாஸெட்டர் தசையின் ஆழமான அடுக்கில் காணப்படுவதாக தெரிவித்துள்ளனர். மாஸெட்டர் தசை (Masseter Muscle) தாடையின் கீழ் பகுதியை உயர்த்துவதோடு உணவை மெல்லுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

● ஆப்பிள் நிறுவனத்தின் சந்தை மதிப்பு 3 டிரிலியன் டாலர்கள் வரை உயர்ந்துள்ளது. இதன் மூலம் இத்தகைய மதிப்பை எட்டிய முதல் நிறுவனமாக ஆப்பிள் தடம் பதித்துள்ளது.

# வானவில்லே.. வானவில்லே..

ரசிக்கும் சீமானே!!

இ.தனிஸ்ரன்

நிறம்! மனித சமுதாயத்தின் மிக முக்கியமான அரசியல். அதிலும் கறுப்பும் வெள்ளையும் தோலில் ஒட்டிக்கொண்டு மனிதர்களை மடையர்களாக்கி உள்ளே ஓடும் சிவப்பை ருசி பார்த்த வரலாறு மிக நீண்டது. கறுப்பு தாழ்ந்தது - தீண்டத்தகாதது என்றும் வெள்ளை உயர்ந்தது - தூய்மையானது என்பதும் இன்று வரை சமூகத்தின் பொதுப்புத்தியில் ஆழ வேரூன்றிவிட்ட வர்ண அரசியல்.

கறுப்பை கொண்டாடும் ஒரே பொது நிலை காதல். அரசியல் நிலை பெரியாரிசம்.

//இரவின் நிறமே இரவின் நிறமே
கார்காலத்தின் மொத்த நிறமே
காக்கைச் சிறகில் காணும் நிறமே
பெண்மை எழுதும் கண்மை நிறமே
வெயிலில் பாடும் குயிலின் நிறமே
எல்லாம் சேர்ந்து கூந்தல் நிறமே//

கார்குழல் சோலையில் சிக்கி சாலை தேடி அலையும் காதலனுக்கு காதலியின் கருங்கூந்தலின் மேல் இருக்கும் மயக்கமே கவி வர்ணனையின் தொடக்கம்.

காதலன் கருப்பானவனென்றால்,

'கருப்பு தான் எனக்கு பிடிச்ச கலரு'

என்று காதலி கவிதைகள் புனைய ஆரம்பித்துவிடுகிறாள்.

********

நிறங்களின் விஞ்ஞானம் பற்றி சொன்னால், சூரியனிலிருந்து வரும் வெள்ளொளி ஏழு நிறங்களின் சேர்க்கை. அந்த ஏழு நிறங்களின் பிரிகை தான் நாம் காணும் அத்தனை நிறமும். ஒரு பொருள் பச்சையாக தெரிகின்றதென்றால் அந்த பொருளில் சூரிய ஒளி படுவதனால் பச்சை நிறம் மட்டும் தெறித்து கண்ணை அடைய மிச்சம் ஆறு நிறமும் அந்த பொருளினால் உறிஞ்சப்பட்டு விட்டதென்று பொருள். வெள்ளையாக தெரிகிறது என்றால்



ஏழு நிறமும் தெறித்து கண்ணை அடைகிறது. கறுப்பென்றால் அனைத்து நிறமும் பொருளாலேயே அகத்துறிஞ்சப்பட்டுவிட்டது என்று அர்த்தம்.

உளவியலின் படி ஒவ்வொரு நிறமும் மனித மனதின் ஒவ்வொரு உணர்வுகளை தூண்டும் அல்லது பிரதிபலிக்கும் இயல்பை கொண்டிருக்கிறதாம். அது இயற்கையில் நாம் ஏற்கனவே பார்த்து வளர்ந்த நிறங்களும் அந்த நிறங்களை கொண்ட பொருட்களும் இணைந்த காட்சிப்பிழையின் நீட்சி.

பச்சையென்றால் புத்துணர்ச்சி. நீலமென்றால் குளிர்மை. சிவப்பென்றால் வலிமை. மஞ்சள் என்றால் நேர்மறை சிந்தனைகள்.

இந்த கோட்டிலேயே, உடலின் நிறம் பார்க்காது மனதின் நிறம் பார்ப்பதாக சொல்லப்படும் காதலிலும் நிறமுண்டு என்கிறான் கவிஞன்!

**//காதலில் காதலில் காதலில் நிறமுண்டு**
**என் அன்பே அன்பே உனக்கும் நிறமுண்டு//**

********

சமிக்ஞையில் பச்சை விளக்கு ஒளிர வாகனங்கள் நகர தொடங்குவது போல வாழ்க்கை என்ற பயணத்துக்கு காதல் எனும் சம்மதம் அவசியமே!

**//பச்சை நிறமே பச்சை நிறமே**
**இச்சை ஊட்டும் பச்சை நிறமே**
**புல்லின் சிரிப்பும் பச்சை நிறமே**
**எனக்கு சம்மதம் தருமே**
**பச்சை நிறமே பச்சை நிறமே**
**இலையின் இளமை பச்சை நிறமே**
**உந்தன் நரம்பும் பச்சை நிறமே**
**எனக்கு சம்மதம் தருமே//**

புல்லின் சிரிப்பு- இலையின் இளமை. இயற்கை உடுத்திய பச்சை சேலை.

**'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா ~ பையன் காதலுக்கு பச்சைக்கொடி காட்டு லேசா'**



********

நீலமும் பச்சையும் தான் உலகத்தின் நிறங்கள். கடல் நீலமாகவும் நிலம் தாவரங்களினால் பச்சையாகவும் தான் இயற்கை தன்னை தகவமைத்துக் கொண்டது. அப்படியான பச்சை என்பது காதலுக்கு சம்மதம் தரும் நிறமென்கிறான் இவன். வீதி

நிறப்பாகுபாடு உலகமெல்லாம் தலைவிரித்து ஆடிய போது தோலின் நிறம் கறுப்பு - வெள்ளை என்றாலும் உள்ளே ஓடும் இரத்தம் சிவப்பு என்பதே சமத்துவத்தை வலியுறுத்தும் முக்கிய பிரச்சாரமாக



இருந்தது. அதே நேரம் உழைக்கும் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கவென கார்ல் மார்க்ஸ் பொதுவுடமை சித்தார்த்தத்தை முன்வைத்த போதும் கம்யூனிசத்தின் வர்ணம் சிவப்பு என்றானது.

***'நிறத்துக்கு ஒவ்வொரு மதிப்பு***
***அந்த நிறங்களில் சிவப்பே சிறப்பு***
***அட வறுமையின் நிறமா சிவப்பு?***
***அதை மாற்றும் நிறமே சிவப்பு!'***

காதலில் சிவப்பை காதலியின் கோபத்துக்கு உவமை செய்கிறான் கவிஞன்.

கோபம் கொள்ளும் போது வெளியிடப்படும் இராசயனங்கள் காரணமாக முகத்தில் உள்ள குருதி கலன்கள் விரிவதனால் குருதி அதிகமாக முகத்தில் தேங்கும். இதனால் கோபப்படும் போது முகம் சிவப்பாக மாறுவது பொதுவான உடற்தொழிற்பாடு.

***//கிளையில் காணும் கிளியின் மூக்கு***
***விடலைப் பெண்ணின் வெற்றிலை நாக்கு***
***புத்தம் புதிதாய் ரத்த ரோஜா***
***பூமி தொடாத பிள்ளையின் பாதம்***
***எல்லா சிவப்பும் உந்தன் கோபம்//***

காதலில் கோபம் எல்லாம் காதலெனும் சூரியனின் பார்வை மேவ பனி போல மறைய வேண்டும். உரிமையான செல்லக்கோபங்கள். அது தான் காதலின் குணம். கோபங்களே நிரந்தரமானால் காதல் காயந்துவிட்டதென்று பொருள்.

*********

தமிழர்களுக்கு மஞ்சள் என்றால் மங்களம் என்பது பொதுவான வாழ்வியல் வழக்கு. நல்ல நாட்களில் மஞ்சளில் பிள்ளையார் செய்வதில் இருந்து மஞ்சள் பூசி குளிக்கும் பெண்கள் வரை மஞ்சளுக்குள்ளேயே பல மன்றங்கள்.

***//அந்திவானம் அரைக்கும் மஞ்சள்***
***அக்கினிக் கொழுந்தில் பூத்த மஞ்சள்***
***தங்கத்தோடு ஜனித்த மஞ்சள்***
***கொன்றைப் பூவில் குளித்த மஞ்சள்***
***மஞ்சள் மஞ்சள் மஞ்சள்***
***மாலை நிலவின் மரகத மஞ்சள்***
***எல்லாம் தங்கும் உந்தன் நெஞ்சில்//***

அத்தனை மஞ்சளும் உன் மார்பில் தங்கும் என்பது, காதலியின் மார்பில்





மஞ்சளை சங்கமிக்க செய்வது காதலின் குறும்பு.

**‘அக்கினிக் கொழுந்திப் பூத்த மஞ்சள்’**

ஏதேனும் ஒரு பொருள் எரியும் போது எரியும் சுவாலையில் மூன்று வலயங்கள் இருக்கும். எரியும் பதார்த்தங்களுடன் தொடர்பில் இருக்கும் காபனோர் ஒக்சைட் நிரப்பிய கறுப்பு வலயம். அதற்கு மேல் சுவாலையின் பிரதான இடத்தை பிடித்திருப்பது, குறை தகனம் நிகழும் மஞ்சள் வலயம். அதற்கும் மேல் சொற்பமாக இருக்கும் பூரண தகனம் நிகழும் நீல வலயம்.

தீயின் பூத்த மஞ்சள் தான் நெருப்புக்கே வர்ணம் பூசுகிறது.

**‘கொன்றைப்பூவில் குளித்த மஞ்சள்’**

பூக்களில் கொப்பும் குலையுமாக பூப்பது கொன்றை. சித்திரை மாதங்களில் பூத்து குலுங்கும் கொன்றைப் பூ நிலத்தில் உதிர, மரத்தை சுற்றி அத்தனை இடமும் மஞ்சள் பட்டொளி வீசும்.

மஞ்சள் - மகிழ்ச்சியின் நிறம்.

********

உலகில் உள்ள மனிதர்கள் பலருக்கும் பிடித்த வர்ணம் நீலம். நட்பின் வர்ணம் - அமைதியின் வர்ணம். நீலத்தின் அரசியல் இந்திய துணைக்கண்டத்தில் சாதிமறுப்பு - சகோதரத்துவம் என அம்பேத்கரிலிருந்து ஆரம்பிக்கிறது.

**//அலையில்லாத ஆழி வண்ணம்**
**முகிலில்லாத வானின் வண்ணம்**
**மயிலின் கழுத்தில் வாழும் வண்ணம்**
**குவளைப் பூவில் குழைத்த வண்ணம்**
**ஊதாப் பூவில் ஊற்றிய வண்ணம்**
**எல்லாம் சேர்ந்துன் கண்ணில் மின்னும்//**

**‘முகிலில்லாத வானின் வண்ணம்’**

சூரியனில் இருந்து வரும் ஒளி வளியில் உள்ள துகள்களில் பட்டு சிதறலடையும். நீலமும் அதனையும்



விட அதிர்வெண் கூடிய கதிர்களுமே அதிகம் சிதறலடைந்தாலும் நீலத்திற்கான கண்ணின் உணர்திறன் அதிகமாக இருப்பதால் வானம் நீலமாக தெரிகிறது.

**'அலையில்லாத ஆழி வண்ணம்'**

முன்னர் ஆகாயத்தின் நீல நிறத்தின் பிரதிபலிப்பே கடலின் நீல நிறத்துக்கான காரணம் என்று நம்பப்பட்டது. அப்படி என்றால், இரவிலும் கடல் நீல நிறமாகவே தோன்றுவதெப்படி? அதை தான் சி.வி.ராமனின் "ராமன் விளைவு" விவரிக்கிறது. சூரிய ஒளி, தண்ணீர் மூலக்கூறுகள் மூலம் சிதறடிக்கப்படுவதனாலேயே கடல் நீல நிறமாக தோன்றுகிறது என்றார் ராமன்.

**'நீல நிறம் வானுக்கும் கடலுக்கும் நீல நிறம்**
**காரணம் ஏன் கண்ணே உன் கண்ணோ'**

மனித கண்ணின் நீல நிறத்துக்கு காரணம் பரம்பரை அலகுகளின் சேர்க்கை. கண்ணின் கதிராளியின் நிறத்தை வானுக்கும் கடலுக்கும் பிரதிபலிப்பாக்குவது கவிஞனின் கற்பனை.

**'நீலத்தை பிரித்து விட்டால் வானத்தில் ஏதுமில்லை'**

இது விஞ்ஞானம் வழி ஓர் ஆன்மிகத்தேடல்.

********

**//வெள்ளை நிறமே வெள்ளை நிறமே**
**மழையில் உடையும் தும்பை நிறமே**
**விழியில் பாதி உள்ள நிறமே**
**உனது மனசின் நிறமே//**

வெள்ளையான மனம் என்றால் நல்ல சிந்தனை கொண்டவர் என்பது பொதுவான பார்வை. எல்லா காதலனுக்கும் தன் காதலி நல்லவள் தான்.

தும்பை என்பது ஒரு வகை பூண்டுத்தாவரம். பற்றைகளில் முளைத்தாலும் பல்வேறு மருத்துவ குணங்களை உடையது. இதில் மிக மென்மையான இதழ் போன்ற வெள்ளை பூ பூக்கும். மழை நீரின் அழுத்தத்தில் உடைந்து விழும் அளவுக்கு மெல்லிய பூ அது. கிராமத்து காதலன் என்பதனால் தும்பையும் கவிதையாகியிருக்கிறது.

**காலம் மாறும் போது காதலின்**
**நிறமும் மாறும் ~**
**காதலர் நிறமும் மாறும்.**



காவ்யமோகன்

40



திவாகரன்

# சித்திராங்கதா

### சந்திக்க ஓர் அழைப்பு

மருள் மாலை வேளை ஒன்றில் மந்திரிமனை வாயில் முகப்பில் ராஜமந்திரியார் ஏகாம்பரம் தொண்டமனாரும், வன்னியர் விழாவிற்காய் வருகை தந்திருந்த திருமலை தனியுண்ணாப்பூபால வன்னியரும் உரையாடிக் கொண்டிருந்தனர். வயதில் மூத்த இருவரினதும் நட்பு பல காலத்து கதைகளை கொண்டிருந்தது. ஒவ்வொரு முறையும் பூபால வன்னியர் யாழ்ப்பாணம் வரும்போது மந்திரிமனையில் தங்கிச் செல்வதே வழக்கம்.

மாருத வல்லிக்கும் பூபால வன்னியர் மீது ஒரு தனி மரியாதை இருந்தது. மந்திரியாரும் பூபால வன்னியரும் பேசிக் கொண்டிருக்கையில் அரண் மனையிலிருந்து மந்திரி மனை நோக்கி மாருதவல்லி வந்தாள். பூபால வன்னியரைக் கண்டதும் அவர் கால்களில் வீழ்ந்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டாள்.

மாருதவல்லியின் தலையினை தன் முதிர்ந்த கரங்களால் தடவியபடியே பூபால வன்னியர்

“பெருமகளே, நீ சகல சம்பத்துக்களும் பெற்று ஈழத்தின் ஈடு இணையற்ற சௌந்தர்யக்காரியாய் வாழவேண்டும். ஒரு கொடிய ஆபத்திலிருந்து எப்படியோ மீண்டு வந்துவிட்டாய். அந்தக்கரிய செய்தியினை கேள்வியுற்ற நாளில்

நான் பட்ட பாடினை எப்படியும் என்னால் கூற இயலாது தாயே. நல்லவேளை, அந்த கோணநாதன் அருளால் தஞ்சைவீரர் உன்னை காத்தருளினார். இனி எல்லாம் உனக்கு சுபமாகவே அமைய வேண்டும் மகளே..”

என்று கனிவான பார்வையோடு கூறிக் கொண்டிருந்தார்.

பூபால வன்னியர் தஞ்சை வீரரைப் பற்றிக் கூறியபோது மாருதவல்லி தன் இடையில் மறைத்து வைத்திருந்த ஒரு பொருளை தடவிப்பார்த்து அதன் இருப்பை உறுதி செய்து கொண்டாள்.

“தங்கள் ஆசிர்வாதம் உடன் இருக்கையில் எனக்கு என்ன ஆபத்து வந்துவிடப் போகிறது? ஆனால் தாங்கள் தான் இங்கு வருவதை இப்போது வெகுவாகக் குறைத்து விட்டீர்கள்”

என்று விளையாட்டாய் திருமலை வன்னியர் மீது கோபங் கொண்டாள்.

“எனக்கு மட்டும் வரவேண்டும் என்று இல்லையா மகளே? என்ன செய்வது. பல நேரங்களில் இந்த ஆட்சிச்சுமை இருக்கிறதே, அது தலை நிமிரவை விடுவதில்லை. இல்லாதிருந்தால் என் ஓய்வுநேரமெல்லாம் நான் மந்திரியாரையும் உன்னையும் பார்க்க இங்கு பறந்து வந்துவிடுவேனல்லவா?”

“ஆமாம்.. ஆமாம்.. என் தந்தைக்கும் சரி.. உங்களிற்கும் சரி.. இந்த ஆட்சிச்சுமையில்த்தான் சிந்தனை சதாநேரமும் இருக்கிறது. தங்களி ருவருக்கும் இதிலிருந்து மீட்சி என்ற ஒன்று இருக்குமென்றே நான் நம்பமாட்டேன்.”

என்று கூறிச் சிரித்தாள். பூபால வன்னியரும் ராஜமந்திரியாரும் கூடவே சிரித்தனர்.

மீண்டும் மாருதவல்லி தன் இடையில் ஒளித்து வைத்திருந்த பொருளை தடவிப்பார்த்தவாறே

“சரி நீங்கள் உங்கள் ஆட்சிச்சுமை குறித்தே உரையாடுங்கள். நான் உடனடியாக தஞ்சைவீரரை சந்தித்தாக வேண்டும். விடை பெறுகிறேன்.” என்று புன்னகையோடு கூறியபடி மனைக்குள் உள் நுழைந்தாள் மாருதவல்லி.

மாருதவல்லி விடைபெற்றுச் சென்ற உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் பார்த்த பூபாலவன்னியர் ஒரு மறைமுகச் சிரிப்போடு ராஜமந்திரியாரை நோக்கினார். ராஜமந்திரியார் அந்தச்சிரிப்பை உள்வாங்கியபடியே வானத்தை நோக்கினார். அவர்கள் நட்பின் மொழியில் அவர்கள் பேசிய விடயம் என்னவென்று எல்லோருமே ஊகித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம்.

தனிமையே தக்கதுணையாக தீரா யோசனையில் இருக்கும் எம் கதாநாயகன் வருணகுலத்தானை நீண்ட நாட்களிற்குப் பின் மாருதவல்லியோடு நாமும் சந்திக்கப் போகின்றோம்.

"வன்னியர் விழா நிறைவடைந்த பின்னும் தஞ்சைத்தளபதி தீவிர சிந்தனையில் இன்னும் இருப்பது ஏனாமோ?" என்ற கேள்வியோடு நுழைந்தாள் மாருதவல்லி.

"வாருங்கள் தேவி" என்று சிந்தனை திடுக்கிட்டு திரும்பிப்பார்த்தபடி கூறிய வருணகுலத்தான் ஒரு ஆழ்ந்த சுவாசத்திற்குப் பின்,

"வன்னியர் விழா நன்றாகவே தான் முடிந்துவிட்டது. வன்னி சிற்றரசர்கள் யாழ்ப்பாண பேரரசு மீது கொண்டிருந்த பயபக்தியையும், மரியாதையையும் கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சி யடைகிறேன். சிற்றரசுகளின் சேர்க் கையே யாழ் இராச்சியத்திற்கு பெரும்பலமாக இருப்பதை நான் இப்போது தான் அறிகிறேன். உரிய நாளில் மட்டும் வன்னியர் விழா நிகழாமல் போயிருந்தால் அந்த சேர்க்கையே உடைந்திருக்கக்கூடிய அபாயம் இருந்ததை மந்திரியார் அன்று அவையில் கூறிய போதுதான் உணர்ந்து கொண்டேன். வன்னியத்தேவனின் சதித்திட்டங் களை சாதுர்யமாக தோற்கடித்த மந்திரியாரின் மதிநுட்பதிறமையை எண்ணி நான் உள்ளார வியந்து கொண்டிருக்கிறேன் தேவி" என்றான்.

"உண்மைதான் தளபதியாரே, தன் தந்தையிடம் எதிர்த்துப் பேசுவதாக அன்று சென்றவளும் தந்தையின் பேச்சிற்கு கட்டுப்பட்டுப் போனாள் என்று என்னைப்பற்றிக் கூட அன்று நீங்கள் நினைத்திருக்கலாம். ஆனால் உண்மையில் நான் அன்று தந்தையின் கண்களில் கண்டது அப்படியொரு உறுதி. எக்காரணம் கொண்டேனும் சித்திரை முழுநிலவு நாளில் வன்னியர் விழாவை நடாத்த வேண்டியது நாட்டிற்கு மிகமிக அவசியம் என்ற கருத்தில் அவரிடம் வேற்றுக்கருத்தே இல்லை என்பதை புரிந்து கொண்டேன். அதற்கு வலுவான காரணம் ஏதோ இருப்பதை உணர்ந்து கொண்டே மேற்கொண்டு அவரை சங்கடத்திற்கு உள்ளாக்காமல் விலகிக் கொண்டேன்."

"உண்மை தேவி.. நான்தான் சிறிதும் யோசிக்காமல் கூறிவிட்டேன். ஒரு வேளை விழா மட்டும் நடக்காது போயிருந்தால் ஏற்பட்டிருப்பது பேரிழப்பாய் போயிருக்கும். ஆனால் எக்காரணம் கொண்டும் அப்படியொரு சம்பவத்திற்கு ராஜமந்திரியார் அனுமதித்திருக்கமாட்டார் என்பதை இப்போது உறுதியாக நம்புகிறேன்." என்றான்.

"மிக்க சரிதான் தளபதியாரே, நான் வரும்போது தாங்கள் தீவிர யோசனையில் இதைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தீர்களா? உள்ளத்தில் புகைபோல் படர்ந்த வேறொரு வேதனையில் இருப்பீர்கள் என்றல்லவா வந்தேன்."

"தாங்கள் கூறுவது பொய்யல்லத்தான். ஒரு புறம் வன்னியர் விழா வெற்றிகரமாக நிகழ்ந்து முடிந்து விட்டது. ஆனால் அந்த வெற்றி துளியளவும் உள்ளத்தில் இன்பத்தை தராமல் அந்த வெற்றிக்குப் பின்னுள்ள ஒரு தோல்வியின் கதறல்தான் என்னை நிம்மதி

கொள்ள விடாது துன்புறுத்துகிறது தேவி. இந்த சங்கடமான நிலையில் என் அடுத்த அடி குறித்த எண்ணமே எனக்கு யோசனையாக இருக்கிறது. சித்திராங்கதாவை வேதனைத் தீயில் வாடவைத்துக் கொண்டு நான் பறங்கியரை சரித்து வெற்றிவாகை சூட்டிக் கொள்ளினும் அது என் உள்ளத்தில் இன்பத்தை நல்காது என்றறிவேன். ஆனால் என் சுயவிருப்பங்களை தாண்டி என் கடமையைச் செய்து முடிக்கவேண்டியதே என் உடலில் தலை இருப்பதற்கான தற்சான்றாகும் என்பதையும் நான் ஒருபோதும் மறவேன்."

"தங்கள் நிலமை எனக்கு தெளிவாகவே புரிகிறது தளபதி.. சித்திராங்கதா ஓர் ஆடற்கலையரசி என்பதைத் தாண்டி அவளும் ஓர் ஈழத்து மங்கையாவாள். நாட்டின் நலனையே அவளும் தன் தலையாய விடயமாய் எண்ணுவாள் என்றே நான் கருதுகிறேன். இது குறித்து தாங்களே சித்திராங்கதாவிடம் எடுத்துரைத்தலே ஆகச்சிறந்த வழி ஆகும்."

"நான் எங்ஙனம் சித்திராங்கதாவை இனி சந்திக்க இயலும் தேவி..? என் முகத்தினை நேரெதிரே கண்டால் அவள் கண்கள் பொறுமை காக்குமா?"

"கண்டால் பொறுமை காப்பது மட்டுமல்ல. காண்பதற்காக அந்தக்கண்கள் காத்திருக்கின்றன என்பதே உண்மையாகும்."

"என்ன கூறுகிறீர்கள் தேவி?.."

"ஆம் உண்மையைத் தான் கூறுகிறேன். என் சேவகி ஒருத்தி மூலம் தங்களிற்கு ஓர் ஓலை வந்திருக்கிறது. இதோ.."

என்று தன் இடையில் மறைத்து வந்திருந்த ஓலையை எடுத்து நீட்டினாள் மாருதவல்லி.

"தஞ்சை மாவீரர் தம்மை சந்திக்கப் பிரயத்தனம் கொண்டேன். யாரும் அறிய நேரா வண்ணம் காரிருள் கவிழும் பொழுதில் சட்டநாதர் கோயிலில் நான் இருப்பேன்...
எதிர்பார்ப்போடு
சித்திராங்கதா..."

ஓலையை படித்த வருணகுலத் தானிற்கு எதையும் நம்ப முடியவில்லை. சித்திராங்கதாவை நேருக்கு நேரே எதிர்கொள்வது கூட இனி சாத்தியமில்லை என்று வாடியவனுக்கு சந்திக்க அழைப்பு வந்தருக்கிறது என்பதை எப்படி நம்ப இயலும்?
நீங்கள் நம்புகிறீர்களா?

அதற்காக ஆகப்பெரிய சந்தோசம் தரும் இப்படியொரு செய்தியை சந்தேகித்து புறந்தள்ளிவிட முடியுமா?

**ஒருவேளை உண்மையாக இருந்தால்!**

**பார்ப்போம்...**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | |
| | | 6 | | | | 7 | |
| | | | 8 | | 9 | | |
| 10 | | 11 | | | | | 12 |
| | | | | 13 | | | |
| 14 | 15 | | | | | | |
| | | | 16 | | | 17 | |
| 18 | | | | | | 19 | |




### இடமிருந்து வலம்

1- மாலை கட்டப் பயன்படும் பூச்செடி
6- சோறு வடித்து வரும் நீர் (குழம்பி)
7- செல்வம்
8- தடுமாற்றம் (குழம்பி)
10- புராதன சீனாவின் வணிக மார்க்கம்
13- இங்கிலாந்தின் தலைநகரம் (குழம்பி)
14- உணவு (திரும்பி)
16- காற்று (திரும்பி)
17- குரங்கு (திரும்பி)
18- மகாகவி
19- சம்மதம்

### மேலிருந்து கீழ்

1- பனையிலிருந்து எடுக்கும் வெல்லம்
2- இந்துக்களின் புனித தலம்
3- சட்டரீதியற்று வசூலிக்கும் பணம் (குழம்பி)
4- திரௌபதியின் கணவன்மார்
5- தரை (குழம்பி)
9- மருத்துவ திரவம் (குழம்பி)
11- சொண்டு (தலைகீழ்)
12- ஊரடங்கால் வருவது
15- அரச பாதுகாப்பு கட்டுமானம் (குழம்பி)
16- தொன்ம உயிரினச் சிற்பம் (தலைகீழ்)
17- பேய் (தலைகீழ்)

**சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

### குறுக்கெழுத்துப்போட்டி - 36 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | ம் | 2 ரா | 3 ன் | 4 கா | ன் | | 5 வ |
| ல | | 6 ம் | மா | ய | | 7 ப | ல் |
| 8 வு | 9 த | க | | 10 ம் | 11 க | ட | நா |
| 12 கா | லை | | 13 மே | | 14 ழி | கோ | |
| த் | | | 15 ய் | வே | | ட் | |
| 16 த | 17 டி | 18 ம | ன் | | 19 வே | டி | 20 ட் |
| 21 கி | ட் | டி | ப் | 22 பு | ல் | | ஓ |
| 23 ளி | வ | | 24 ப | லி | | 25 வா | டை |

ப. கிரிஜா



# முன்பள்ளிப்பருவ மாணவர்களது மொழித்தேட்டம் 2

**2. இலக்கிய மீளாய்வு**

பங்கஜம்.ஜி, அவர்கள் 2009 இல் வெளியிட்ட பள்ளி முன் பருவக்கல்வி எனும் நூலில் முன்பள்ளிப்பருவத்தில் ஒரு பிள்ளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய மொழி வளர்ச்சி நிலைகள், மொழிப்பயிற்சிகள், சமூக அறிவியல் காரணிகள், குழந்தையின் வளர்ச்சி நிலைகள் ஊடான மொழி வெளிப்பாடுகள், மொழி வளர்ச்சியினை ஊக்குவிக்கும் காரணிகள், முன்பள்ளிப் பருவப் பிள்ளைக்கான பாடத்திட்டம் என்பனவற்றை தெளிவாக விளக்கியுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தினால் 2016 இல் வெளியிட்ட பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும் என்ற கைந்நூலில் மொழித்திறன்களை வளர்த்தலுக்குரிய செயற்பாடுகள், ஆக்கச் செயல்கள், விளையாட்டுக்கள் ஊடாக மொழியைப் பயன்படுத்தும் வழிவகைகள், முன்பள்ளியில் ஆசிரியர்களினால் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

சித்திராதேவி.ஞா, 2000 இல் ஆரம்பக்கல்விக்கு முன்பள்ளிகளின் பொருத்தப்பாடு எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வுக்கோவையில் முன்பள்ளிகளில் பெண் ஆசிரியை களிடம் கற்பவர்கள் அதே எதிர்பார்ப்புடன் தரம் ஒன்றுக்கு வருவதால் தரம் ஒன்றிலே பெண் ஆசிரியையின் கற்பித்தல் சிறந்ததாகும் என்பது பற்றிய கருத்துக்களையும், ஆரம்ப வகுப்பில் கடினமான மொழிநடை பயன்படுத்தல், அதிக நேரம் கற்பிக்கப்படுவதால் பிள்ளைகளுக்கு கற்றல் சுமையாகி வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது என்பது பற்றியும் விளக்கியுள்ளார்.

நிரூபா.அ, 2014 இல் முன்பள்ளிக்கல்வி அபிவிருத்தி





தொடர்பான பிரச்சினைகள் எனும் தலைப்பில் வலிகாமம் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுக் கோவையில் முன்பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள், ஆசிரியரின் கல்வித்தகைமை, ஆசிரியர் பயிற்சி முறை, ஆசிரியரின் கற்பித்தல் முறை, மாணவர்களது அடைவு மட்டம் மற்றும் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் வெளியேறுதல் போன்ற விடயங்கள் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஹஸன். எம். எச். எஸ், அவர்கள் 2006 இல் வெளியிட்ட முன்பள்ளிக் கலைத்திட்டமும் வழிகாட்டியும் எனும் நூலில் முன்பள்ளி என்ற எண்ணக்கரு பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் முன்பள்ளியில் ஆசிரியரது செயற்பாடுகளில் முக்கியமானது ஒரு மாணவன் தரம் ஒன்றில் கற்கப் போகும் விடயங்கள் பற்றிய விளக்கத்தை பெற்றிருப்பது அவசியம் என்பதை வலியுறுத்தி அது பற்றிய விளக்கங்களையும் மொழியை விருத்தி செய்ய அளிக்கப்படும் செயற்பாடுகள், சூழல் பற்றிய தேடல், சமூக விருத்தியை ஏற்படுத்தல், முன்பள்ளி மாணவர்களை முறைசார் கல்விக்குத் தயார்ப்படுத்தல் போன்ற விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார்.

**Homel.P, Palij.M, Aaronson.D,** ஆகியோர் 1982 இல் வெளியிட்ட **Childhood bilingualism** என்ற நூலில் குழந்தைப்பருவத்தில் இரு மொழிகளை உள்வாங்கும் திறன் பற்றியும் மேலும் இருமொழிக் கற்பித்தல் திட்டங்கள் ஊடாக இருமொழிக் கையாளுகையினை சமூகங்களுடனும் சூழலுடனும் மொழிவிருத்திக் கட்டங்களுடனும் விளக்கியுள்ளனர்.

**Brown.R,** 1963 இல் வெளியிட்ட **First language** என்ற நூலில் குழந்தை ஒவ்வொரு கட்டத்திலும் செயல்திறன் ஊடாக அறிவைப் பெறும் விதங்களையும், ஒவ்வொரு நிலையினையும் கடந்து செல்லும் போது மொழியியற் சூழலுடன் செயற்படும் முறைகளையும், மொழியைக் கையகப்படுத்தல், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளைத் தேடிக் கொள்வது பற்றிய விடயங்களையும் கூறியுள்ளார்.





## 3. ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது பிரயோக மொழியியல் அணுகுமுறையில் அமைந்துள்ளது. இவ் ஆய்விற்கான தரவு சேகரிப்பானது தெரிவு செய்யப்பட்ட சில முன்பள்ளிகளின் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே இவை புள்ளிவிபர ரீதியாக அமைவதால் அளவுசார் ஆய்வாகவும் மற்றும் இவ் ஆய்வில் கருத்துக்கள் விபரிக்கப்படுதல் எனும் நிலையில் பண்புசார் ஆய்வாகவும் அமைந்து இரண்டும் கலந்த ஒரு ஆய்வு முறையாகக் காணப்படுகின்றது.

## 4. முடிவுகளும் கலந்துரையாடலும்

வலிகாமப் பிரதேசத்தில் முன்பள்ளி மாணவர்களுக்கு மொழிவிருத்தி முக்கியமானது என்பதை உணர்ந்து முன்பள்ளிகளில் மொழிவிருத்திபற்றிக் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர். மொழிவிருத்தியை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சிகளும் வழிகாட்டல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மொழிவிருத்தியானது கதைகூறல், பாடல், பொருட்களைப் பயன்படுத்தல் என்ற முறைகளூடாகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகிறார்கள். மிக அருமையாக சில முன்பள்ளிகளில் மொழிவிருத்தி சிறப்பாக நடைபெற்றாலும் ஆசிரியர்களது தகுதி என்று பார்க்கையில் தமிழ் மொழயில் C தரம் இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இங்கு ஆரம்பத்தில் வலிகாம நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் C தரம் இல்லாமல் இருக்கின்றனர். அவர்கள் தற்போது டிப்ளோமா பயிற்சியைப் பெறக்கூடியதகாக உள்ளது.

முன்பள்ளிகள் ஆரம்பித்த கால வரலாற்றைப் பார்க்கின்ற போது முன்பள்ளிகள் ஆரம்பிக்க முன்னரே கூட்டுக்குடும்பங்களில் மொழிவிருத்தி வந்துள்ளது. பின்னர் அந்தந்தச் சமூகங்கள் தங்களது பிள்ளை படிக்க வேண்டும் என்பதற்காக கற்றலுக்கு முன்னரான முன்னாயத்தமாக முன்பள்ளிகளை ஆரம்பித்தனர். முன்பள்ளியை விட சூழலிலிருந்து கற்பது அதிகமாக உள்ளது. ஏனெனில் உறவினர்கள் ஒன்றாக இருப்பது மற்றும் கலந்துரையாடல்



கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதால் மொழிவிருத்தி ஏற்படுகின்றது. நவீனமயமாக்கம் காலமாற்றத்தோடு தனித்தனி மனிதனாக வந்த பிறகு மிக அண்மைக் காலங்களில் மக்களோடு சேர்ந்து செயற்படுவது இல்லாமல் போய்விட்டது. இப்போது நிகழ்வுகள் கூட வீட்டில் இடம்பெறுவது பெரும்பாலும் இல்லாமல் மண்டபங்களில் நிகழ்வதால் உறவினர்கள் ஒன்று கூடி பேசி மகிழ்வது மட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான காரணங்களால் முன்பள்ளிகளில் மொழிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு முன்பள்ளி சார்ந்த விழாக்கள், கலைநிகழ்வுகள், விளையாட்டுக்கள் என்பனவற்றைச் செய்வித்தல் அவசியமாகிறது. இவற்றை வீடுகளிலும் முன்பள்ளிகளிலும் முழுமையாகச் செயற்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**ஆராய்வோம்...**

# அறக்கொடை விழா

**சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 97 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா 07.01.2022 அன்று மேற்படி தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.**





**இந்த விழாவில்**

**சிவத்தமிழ் விருது பெற்ற சான்றோர் 2022**

**1.பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**

**2.எழுத்தாளர்,திருமலை கேணிப்பித்தன்**

**3.கலாநிதி.மனோன்மணி சண்முகதாஸ்**

**4.திரு.அ.பஞ்சலிங்கம் இளைப்பாறிய அதிபர்**

**5.நடனவித்தகி.திருமதி.சாந்தினி சிவநேசன்**





# கோட்டைகளின் சரிவு

எஸ்.எஸ்.நுஜன்

நடைபெற்று வருகின்ற தென்னாபிரிக்க-இந்தியா டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இந்தியா, தென்னாபிரிக்காவின் கோட்டையிலும் இரெண்டாவது போட்டியில் தென்னாபிரிக்கா, இந்தியாவின் கோட்டையிலும் வெற்றி பெற்று இருக்கின்றனர்.

பல வருடங்களாக ஆஸ்திரேலியாவின் கோட்டையாக திகழ்ந்த பிறிஸ்பனில் 2021 இன் ஆரம்பத்தில் டெஸ்ட் வெற்றி பெற்ற இந்தியா, 2021 இன் இறுதியில் தென்னாபிரிக்காவின் செஞ்சுரியனில் வெற்றி பெற்றுள்ளது. இது வரை செஞ்சுரியனில் விளையாடிய 27 போட்டிகளில் 21 இல் வெற்றி பெற்றிருந்த தென்னாபிரிக்கா, இங்கிலாந்திடம் 2000 ம் ஆண்டும் ஆஸ்திரேலியாவிடம் 2014 யிலும் மட்டுமே தோல்வி அடைந்திருந்தது. இவ்வெற்றி இந்தியாவுக்கு தென்னாபிரிக்கா மண்ணில் நான்காவது வெற்றியாக அமைந்தது. இதற்கு முன் 2006 மற்றும் 2018 இல் ஜோஹன்னேஸ்பேர்கிலும் 2010 இல் டர்பனிலும் வெற்றிகள் பெற்றிருந்தது. இந்த போட்டியில் தென்னாபிரிக்கா இரு இன்னிங்ஸ்களிலும் 200 க்கு குறைவான ஓட்டங்களை பெற்றிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சொந்த மண்ணில் இடம்பெறுவது அவர்களின் மீள்வருகைக்கு பின் மூன்றாவது தடவையாகும்: மற்றைய இரு தடவைகளும் 2002 இல் ஆஸ்திரேலியா மற்றும் 2018 யிலும்





இந்தியா க்கு எதிராக ஆகும் இவை இரண்டும் ஜோஹன்னேஸ்பேர்கில் நடைபெற்றவை, எனவே செஞ்சுரியனில் இது முதல் தடவை.

தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்காவின் கோட்டையான செஞ்சுரியனில் இந்தியா சாதித்து காட்ட, இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க மண்ணில்





துரத்தி அடித்த 240 ஓட்டங்கள், நான்காம் இன்னிங்சில் இந்தியாக்கு எதிராக துரத்தி அடிக்கப்பட்ட மூன்றாவது அதிகூடிய ஓட்டங்கள் ஆகும் மற்றைய இரண்டும் 1977 (அவுஸ்திரேலியாவால் 339, பெர்த்) மற்றும் 1987 (மேற்கிந்திய தீவுகளால் 276, டெல்லி) ஆண்டுகளில் நடைபெற்றது. இந்தியா, இதற்கு முன் 150 க்கு அதிகமான வெற்றி இலக்கை நிர்ணயித்து தோற்றது 2007 இல் ஆகும் அதுவும் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக தான். இதற்கு முன் தென்னாபிரிக்கா , 2011 இல் 200 க்கு அதிகமான வெற்றி இலக்கை துரத்தி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்தியா டெஸ்டில் தோல்வி அடையாத ஜோஹன்னேஸ்பேர்கில் (விளையாடிய ஐந்தில் இரு வெற்றி மற்றும் மூன்று வெற்றி-தோல்வி அற்ற முடிவுகளையும் இந்தியா பெற்றிருந்தது.) தென்னாபிரிக்கா வென்று அசத்தியிருக்கிறது. இந்த போட்டியின் தென்னாபிரிக்கா

